தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au

பேச்சுப் போட்டி 02-06-2018 ஆண்டு:- ஒன்பதாம் வகுப்பு

வணக்கம்!

**பாரதிதாசன்**

தமிழ் இலக்கிய வகைகளில் காலத்தால் முந்தியதாக கவிதை விளங்குகிறது. தமிழ்க்கவிதை வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியவாரக பாரதியார் விளங்குகிறார். சாதாரண மக்களும் விளங்கக்கூடிய வகையில் இலகுவான சொற்களைப் பயன்படுத்தி கவிதைகளை எழுதியமையே பாரதியார் ஏற்படுத்திய திருப்பமாகும். பாரதியாரின் வழியைப் பின்பற்றி கவிதைகளை எழுதிய சிறந்த கவிஞராகப் பாரதிதாசன் திகழ்கின்றார். பாரதியாரின் மீது கொண்ட அன்பின் காரணமாக சுப்புரெத்தினம் என்ற தனது பெயரை பாரதிதாசன் என்று மாற்றினார்.

பெண்ணடிமை, வரதட்சணைக் கொடுமை, சிறுபிராய விவாகம், போன்றவற்றிக்கு எதிராகப் பாரதிதாசன் பல கவிதைகளை எழுதினார். இதனால் அவர் புரட்சிக் கவிஞர் என்று அழைக்கப்பட்டார்.

“தமிழுக்கு அமுதென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.”

அதாவது அமுதத்தை போல இனிமையான தமிழ்மொழி எங்கள் உயிருக்கு நிகரானது என்று மென்மையாகப் பாடிய பாரதிதாசன்

**“கொலை வாளினை எடடா – மிகு
கொடியோர் செயல் அறவே
குகை வாழ் ஒரு புலியே எனும்
குணம் மேவிய தமிழா”**

அதாவது குகையில் வாழ்கின்ற புலியைப் போல வீரம் மிக்க தமிழர் தீயவர்களை அழிப்பதற்கு கொல்லுகின்ற வாளை எடுத்து வாடா என்று கடுமையான தொனியில் பாடுகின்றார்.

**“நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை”**

என்று இயற்கையின் எழிலைப் பாடுகின்றார்.

அதாவது நீல நிறமான மேகம் என்ற ஆடைக்குள் தனது உடலை மறைத்துக் கொண்டு நிலவு முகத்தை மட்டும் காட்டுகின்றது என்று வித்தியாசமாகக் கற்பனை செய்து பாடுகின்றார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மறைந்தாலும் அவர் இயற்றிய பாடல்களில் இன்றும் வாழ்கின்றார்.

நன்றி! வணக்கம்!